**STC.No**..1655/2023 நாள்- 01.03.2024 பக்கம் /2023

**ம.சா 1. செல்வராஜ் , த/பெ.செல்லப்பன்**

**எதிரி ஆஜர்.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் தோராயமாக ரூ.3 லட்சம் வரும். நான் வருமானவரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. எதிரியை எப்படித் தெரியும் என்று எனது அறிவிப்பிலோ, பிரமாண பத்திரிக்கையிலோ கூறவில்லை என்றால் சரிதான். எதிரியை எனக்கு எத்தனை ஆண்டுகளாகத் பழக்கம் என்றால் 10 ஆண்டுகளாகப் பழக்கம். 10 வருடம் என்பது எப்போதில் இருந்து என்றால் வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து 10 வருடமாகத் தெரியும். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் விளக்கமார் வியாபாரம் செய்து வருகிறார்.

2) எதிரி எந்த முகவரியில் தொழில் செய்து வருகிறார் என்றால் வேலவன் டிரேடர்ஸ் என்ற பெயரில் தொழில்செய்து வருகிறார். அவர் எந்த முகவரியில் தொழில் செய்து வருகிறார் என்றால் கோவில்பாளையத்தில் தொழில் செய்து வருகிறார். முழு முகவரி தெரியுமா என்றால் என்.புதுார் போஸ்ட், கரூர் மாவட்டம் ஆகும். ரூ.2,50,000/- என்பது ஒரு பெரிய தொகை என்றால் சரிதான். மேற்படி தொகையை நான் எப்படி ஏற்பாடு செய்தேன் என்றால் பால்வியாபாரம், சிறு சேமிப்பு, தேங்காய் வியாபாரம் ஆகியவற்றில் வரும் வருமானத்தை வைத்து ஏற்பாடு செய்தேன்.

3) பால்வியாபாரம் செய்வதற்கோ, தேங்காய் வியாபாரம் செய்வதற்கோ எந்த ஒரு உரிமமும் இல்லை என்றால் சரிதான். எதிரி எவ்வளவு நாட்களுக்கு முன்பு என்னிடத்தில் கடன் கேட்டார் என்றால் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து 15 நாட்களுக்கு முன்பு கேட்டார். அவ்வாறு 15 நாட்களுக்கு முன்பு கேட்டபோது ஏன் நான் உடனடியாக கடன் கொடுக்கவில்லை என்றால் பணம் ஏற்பாடு செய்தவுடன் தருகிறேன் என்று கூறினேன். எதிரி என்னிடம் கடன் கேட்ட தேதியில் என்னிடம் பணம் இருந்ததா என்றால் இல்லை.

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

நீதிமன்ற கேள்வி - இவ்வழக்கின் புரோநோட்டை வைத்து வேறு ஏதேனும் சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ?

பதில் - எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, வீட்டில் பார்த்துவிட்டு சொல்கிறேன்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய அசல் புரோநோட் வேண்டும் என்று கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/–R.Sujatha**
நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்